ஓலை 51 | ஓசை 170 | நளி (டிசம்பர்) 2023

# அகர முதல இலக்கிய பேரவை

அகமும் தமிழே!
முதலும் தமிழே!!




## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!

**நிர்வாக குழு**

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

**ஆசிரியர்கள்**

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

**வடிவமைப்பு**

அ.வில்சன்

## அலுவலக முகவரி

எண்.2 அய்யரப்பர் மேலவீதி, பெரியகண்ணாரத்தெரு

திருவாரூர் மெயின் ரோடு, மயிலாடுதுறை.

# அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# தினம் ஒரு திருக்குறள்



**விழுப்பேற்றின் அ:தொப்பது இல்லையார் மாட்டும்**
**அழுக்காற்றின் அன்மை பெறின்.**

யாரிடத்திலும் பொறாமை இல்லாதிருக்கப் பெற்றால், ஒருவன் பெறத்தக்க மேம்பாடான பேறுகளில் அதற்கு ஒப்பானது வேறொன்றும் இல்லை.

**Translation:**

If man can learn to envy none on earth,
'Tis richest gift, -beyond compare its worth.

**Explanation:**

Amongst all attainable excellence there is none equal to that of being free from envy towards others.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# பசி வந்திடப் பத்தும் போகும்

பா வகை: இணைக்குறள் ஆசிரியப்பா

சிறுவர் பாடல்

மா + மா + விளம்

வயிற்றைக் காக்க வாழ்ந்திடும் வாழ்வில்
பயிற்சிகள் இல்லை
முயற்சியும் இல்லை
இயக்கும் பசியே இருளாய்
இயக்கும் பசியே ஒளியாய்
மயக்குது பண்பை மறக்கச் செய்தே

பசியும் வந்திட பத்தும் பறக்கும்
திசையும் மாறி
அசைக்கும் எதுவும்
கசியும் இரக்கம் கரையும்
விசையாய் பசியும் வீழ
*நசையும் பிறக்கும் நன்மை புதைக்கவே

நசை - குற்றம்




ஓடி ஓடி உழைப்ப தெதற்கு
தேடிடும் பொருளும்
வாடிடா வயிறும்
கூடிடும் போது குறையா?
நாடிடும் மனமும் நயமாய்
பாடிடும் இன்பம் பாயும் எங்குமே!!

வாழ்வின் கொடுமை எதுவென
வயிற்றைக் கேளு தெரியுமே
பாழ்தான் வாழ்வும் பசியிலே
பாடாய் படுத்தும் பட்டினி

உணவைக் கொட்டும் பழக்கமோ
உயிரைக் குடிக்கும் அறிந்திடு
பணத்தை திண்ண முடியுமா
பசியும் எடுக்கும் போதிலே?


உண்ணும் உணவை மதித்திட
உழவன் அருமை புரியுமே
கண்ணும் கருத்தாய் இருந்திடு
காலம் போற்ற வாழ்ந்திடு

பசித்தோர் இரவல் கேட்கையில்
பண்பாய் உதவி செய்திடு
பசியே விதையும் போடுதே
பற்றாக் குறையில் குற்றமாய்

பசிமுன் பறக்கும் எதுவுமே
பழக்கம் கூட பிரளுமே
பசியே பண்பை ஆளுதே
பாரில் உன்னை காட்டுதே

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# அர்த்தமாக்கி நகருங்கள்



இல்லாத
அடுத்த வேளை உணவு
கைபேசி தேடாது

நடைபாதை வாசியின்
உறக்கம்
வாஸ்து பார்க்காது

கூரை வீட்டின்
ஒழுகும் ஓட்டைகள்
மழைத்துளிகளை ரசிக்காது

அனாதை குழந்தையின்
உணவூட்டும் படலத்தில்
நிலவு இருக்காது



எங்கோ
அரிதாவது
உங்களுக்கு
எளிதாகிறது

நன்றியால்
நிரப்புங்கள்
அர்த்தமாக்கி
நகருங்கள்

வாழ்வின்
ஒவ்வொரு
நொடிகளையும்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன்,ஈரோடு

# ஆதலின் மழையே!

கார்த்திகை மாதத்தில் மிக்ஜாம் புயலாலே
கார்மேகங்கள் சூழ்ந்து நிறம்மாறிய வானம்!
பெருமழை ஓயாமல் பெய்வதனால் தற்போது
தெருவெங்கும் மழைநீர்! நிரம்பிடும் நீர்நிலைகள்!
திறந்திடும் மதகுகளால் ஊரெங்கும் பெருவெள்ளம்!

சூழ்ந்த மழைநீரால் பாழாகும் பயிர்கள்!
இன்னுயிர் இழப்பைத் தவிர்த்திட வேண்டி
மின்சார நிறுத்தம்! இன்னல்கள் இருளாலே!
சாலைகளில் பள்ளங்கள்! சாய்ந்திடும் மரங்கள்!
அல்லலுடன் மக்கள் அடைபட்டனர் வீட்டிற்குள்!

தூர்வாரா நீர்நிலைகள்! அடைப்புடனே வடிகால்கள்!
ஏரி,குளம் ஆக்கிரப்பில் நகரான காரணத்தால்
சேருமிடமின்றி மழைநீரெங்கும் சூழ்கிறதே!
அனுபவப் பாடத்தை அளித்திருந்த போதும்
அலட்சியம் காட்டியதால் அவலங்கள் யாவும்!

இனியேனும் விழித்தெழுவோம்! ஏரி,குளம் காப்போம்!
மண்ணரிப்பைத் தடுத்து கரைகளைக் காத்திடுவோம்!
வான்மழை நீரெல்லாம் வழிந்தோடி கடல்சேர்ந்தால்
நன்னீர் வளமின்றி நாம்தவிப்போம் கோடையிலே!

நெகிழிப் பயன்பாடு மிகுந்திட்ட காரணத்தால்
மிகுதியான மழைநீர் வழிந்தோடும் பாதைகளில்
புகுந்தோட வழியின்றி புகுகிறதே வீடுகளில்!
தன்னலம் கருதாமல் மனிதர்கள் வாழ்ந்தாலே
எந்நாளும் துயரில்லை என்றுணர்த்தும் வெள்ளமிது!



மண்ணுக்கு அமுதம் மழைத்துளி யாகும்!
விண் பொய்த்தாலோ வியனுல கில்லை!
அளவில் மிகுந்திடின் அமுதமும் நஞ்சே!
ஆதலின் மழையே.... வேண்டுவது யாதெனின்
அளவுடன் பெய்து வாழவகை செய்திடுவாய்!

கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# காத்திருக்கிறேன்

சிவப்பு பொன்னாங்கன்னி இதழ்கள்
குவித்துக் குவித்துப்
பேசும் சொற்களை எல்லாம்
அள்ளி அள்ளித் திணிக்கிறேன்
ஆயிரம் சாக்கு மூட்டைகளில்

நித்தமும்
நிரம்பி வழியும் படுக்கைறையில்
ஒவ்வொன்றும் பழுத்திருக்கின்றன
என் காதல் வேக்காட்டில்
நீ எப்பொழுது?



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,துபாய்

# தீப்பொறி!

சிக்கி முக்கி கற்களில்
சிக்கிய தீப்பொறி!

ஆதிமனிதன் கண்டதும்
அரண்டான் முதலில்

தெளிந்தவன் அடுமனையில்
தீட்டியே மூட்டினான்.

வேக வைத்தே
வெந்ததை உண்டான்.

சுற்றிட மாவலி
சுற்றிலும் வட்டம்.

தீப்பொறி பறக்கும்
தீண்டிடப் பறக்கும்.

கையில் மத்தாப்பும்
கக்கும் தீப்பொறிகள்.

மின்கம்பிகள் உராய்வும்
மின்னும் தீப்பொறியாய்.

கோடையில் வறட்சி
கோடுகளில் உராய்வு

மூட்டிடும் தீப்பொறி
முழுவதும் அழித்திடும்.



வனத்தை அழித்தே
வசந்தம் அகற்றும்.

அடுப்பில் விறகுகள்
அடுக்கும் தீப்பொறிகள்.

எதிரில் இருப்போரை
எட்டித் தொடும்.

ஆடையில் விழுந்து
ஆடையில் கருந்துளை

சினத்தில் நா கக்க
சீண்டியத் தீப்பொறி

சேர்ந்தாரை அழித்தே
சேர்க்கும் இன்னலை.

வன்முறை கண்டால்
வந்திடும் தீப்பொறி

போராட்டமாய் வெடித்தே
போக்கும் அமைதியை.

தீப்பொறி பறக்கும்
தீப்பந்தம் ஆகாதே!

தீச்சுடராகியே விளக்கினில்
படரும் ஒளியாகிடு.

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# நீ யார்? நான் யார்?



கேள்விகள் கேட்பதே
சுலபமென்று எண்ணி
நீ கேள்வியைத்
தேர்ந்தெடுத்துக் கொள்கிறாய்.
பதிலுரைக்கும் கட்டாயத்திற்கு
என்னை
வலியத் தள்ளிவிடுகிறாய்.

அதனால்
வருத்தமில்லை எனக்கு.
நீ கேள்விகளை
கேட்கத் தொடங்கி விட்டாய்
தாமதமின்றி உடனுக்குடன்
பதிலுரைக்கிறேன் நான்.
இருவரில்
யார் திறமைசாலி என்பதை
உன் அகம் நினைப்பதை
உன் முகம் காட்டிவிடுகிறது

அடுத்தது
கேள்விகள் கேட்க
முடுக்கி விடுகிறாய் என்னை
உன் நிலையறிந்து
நீ சுலபத்தில்
பதிலுரைக்கும் கேள்விகளையே
எடுத்து வைக்கிறேன்.
இப்போதும்
உன் அகத்தை
உன் முகம் காட்டுவதை
அறிகிறேன்.

நான்
சாமானியனல்ல என
நீ தீர்மானித்ததை வெட்ட
வெளிச்சமாய்க் காண்கிறேன்
உன் அகத்தை
உன் முகத்தில்!

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# வெற்றி

வலி இருந்தால்தான் வலிமை பிறக்கும்
பிறக்கும் வலிமையில் வழிகள் திறக்கும்
திறக்கும் வழிகளில் வெற்றிகள் குவியும்
குவியும் வெற்றியில் ஆனந்தம் பிறக்கும்

பிறக்கும் ஆனந்தத்தில் முன்னேற துடிக்கும்
துடிக்கும் ஆசையில் வெறிகள் உருவாகும்
உருவாகிய வெறியில் தோல்வியும் முடங்கும்
முடங்கிய தோல்வியே நாளை உன் நாமம் கூறும்

கூறும் நாமத்திலே அடையாளம் உண்டாகும்
உண்டாகிய அடையாளமே முன்மாதிரியாகும்
முன்மாதிரியே நீ பிறந்ததற்கான அடையாளமாகும்
அடையாளமே இறந்தாலும் வாழவைக்கும்



கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# ஏரோட்டி மண்ண சீராட்டு எம்மாமாவே

அதிகாலை வேளையிலே மாமாவோடு பயணம்
தூக்குச் சட்டியிலே கஞ்சியும் கருவாடும்
கொண்டு போய் வயலிலே நடவு
நட்டு வாய்க்காலுக்கு தண்ணி பாய்ச்சி
களைப்பு நீங்க பாட்டு பாடி
வருவதே சுகம் தானே விதை
நெல் போட்டு அறுவடை செய்து
புத்தரிசி நெல்லில் பாயசம் வைத்து
குலச்சாமியை கும்பிட்டு உறவினருக்கு கொடுத்து
உண்பதில் மகிழ்ச்சி வேறு மாமா
அங்காளி பங்காளி சண்டைப் போட்டு
சமாதானம் செய்து திருப்பி அழைக்கையிலே
ஊரே கொண்டாடும் மாமா மனசும்
நிறைஞ்சு ஊருக்கு செல்லுகையிலே நம்மை
மறக்க மாட்டாங்கே அன்பும் பண்பும்
நிறைந்த கிராமம் நமக்கு எல்லாம்
வாழ்வு தந்து வாழவும் வைத்ததே.



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# கட்டழகு மச்சானே

வெட்டருவா மீசைவச்ச
கட்டழகு மச்சானே
வெட்டருவா மீசைவச்ச
கட்டழகு மச்சானே



உன்னழகைக் காட்டாதே
கண்ணுபட்டுப் போகுமய்யா
எடுப்பான நெஞ்சிலதான்
காதல்ரேகைப் பதிக்கட்டுமா

உப்பியக் கன்னத்துல
உம்மாவும் தந்திடட்டுமா
ஆளான எனக்குள்ள
ஆசையாச்சி ஒம்மேல

ஓரக்கண்ணாலப் பாத்தியே
உருகிடுச்சே ஏமனசு
ஒதட்டத்தான் சுழிச்சியே
வெக்கந்தான் வந்திடுச்சே

கன்னிப்பொண்ணு என்னதான்
கண்ணால மயக்கிப்புட்டே
பக்கத்துல நீவந்தாலே
வேர்த்துதான் கொட்டுதே

மோகத்துலப் பாக்கையில
தாகந்தான் எடுக்குதே
கட்டிப்பிடிக்க வாரியே
படபடக்குது மனசுதானே

ஒறவுக்காரன் நீதானே
ஒதுக்கத்தான் முடியலையே
ஒன்னோட சேரத்தான்
நல்லநாளும் பாருமய்யா


கண்ணாலம் கட்டிக்கிட்டா
தடையேதும் இல்லையே
சந்தோசமா வாழத்தான்
காத்திருக்கேன் நான்தானே

தேக்குமர மாருலதான்
சாஞ்சிக்கிறேன் தோதாகத்தானே.

கவிஞர் பெ.வெங்கட லட்சுமி காந்தன்,விருதுநகர்

# மின்மினிப்பூச்சி

கார்த்திகைத் திங்கள்
காற்றும் மழையும்
விடாது அடிக்க
தேவதையின்
அணைந்த
அகல் விளக்கில்
வந்தமரும்
மின்மினிப்பூச்சி!



அகர முதல

கவிஞர் இ.ரமேஷ்,மீன் துள்ளி

# பண்டைய காலத்தில் வீடு

பழமையும் பொலிவோடே
பசுமரத்தாணி நினைவுகளாகவே
பகல்நிலவாய் மறைந்திருந்தே

படிப்படியாக ஏற்றங்களுமே
பரிபூரண ஒற்றுமையும்
பகைமை மறந்த உறவுகளும்

பண்டிகை கால கொண்டாட்டங்களும்
பட்டுத்துணியின் பளபளப்போடு
பளபளவென பிரகாசித்திடுமே

பத்துமாதம் சுமந்தவளையும்
பவழமாய் வளர்த்தவரையும்
பகுத்தறிவு படிப்பிதவரையும்

பண்டங்கள் பகிர்ந்துண்டதையும்
பழக்கங்கள் கற்றதையும்
பள்ளிசெல்ல கிளம்பியதையும்

பட்டம்விட்டு பார்த்ததையும்
பட்டாம்பூச்சி பிடித்ததையும்
பக்கம் பார்த்து ஒளிந்ததையும்

பறித்து பூ சூட்டியதையும்
பழங்கள் பிடுங்கி ருசித்ததையும்
பளிங்கு போன்ற நினைவுகளாய்



பாசமிகு போராட்டங்களாய்
பாதையமைத்ததே வாழ்க்கைக்கும்
பாதிநாட்கள் கழிந்ததும்

பாடி ஆடி திரிந்ததுவும்
பாவனைகளில் நடித்ததுவும்
பாட்டி கதை கேட்டதுவும்

பாய்ந்து அடித்துக்கொண்டதும்
பாண்டிவிளையாடி விழுந்ததுவும்
பாக்கியங்கள் பெருகியதும்

பாரம்பரியம் வளர்த்ததுவும்
பாடம் பல படித்ததும்
பாகுபோல கரைந்ததுவும்

பாரங்களை இறக்கியதும்
பால்ய பருவ தேன்நினைவுகளும்
பாழடைந்த வீட்டினை பார்க்கையிலே

பனிக்கட்டியான நினைவலைகள்
பாறைபோன்றே அழுத்தியே
பாழ்மனதையும் வதைக்குதே!

கவிஞர் நீலாசுபாஷ்,ஆக்கூர்

# மீண்டும் கிராமத்து வாழ்க்கைக்கு செல்வோமா!

கலங்கரை ஒப்பனை கிராமத்து கற்பனை
கண்கள் ஆர்ப்பரிக்கிறது அதன் அழகில்
இயற்கை வசந்தம் இன்னுயிர்தானே
வசந்த தோரணை கிராமத்து பாவனை
பள்ளம் மேடும் பாதை திரட்டும்
பல்லாங்குழியும் பழகச் சொல்லும்
குருதி சிதறும் நேரம் மண் படரும் நேரம்
வண்ணங்கள் ஆயிரம் அருவிகள்
நீரோடையின் நீர்க்குமிழிகள்
ஏர் பிடிக்கும் கண்மாயும்
ஏற்றம் இறைக்கும் உழவன் மாயும்
கூழோடு கும்மியாட்டம்
திருவிழாக்கால மெய் ஆட்டம்
தொட்டில் ஆடும் பெட்டகம்
சின்னஞ்சிறு மழலையின் மந்திரம்
மறக்குமா அன்னை தந்தையின் அன்பு
துளிருமா தாத்தா பாட்டியின் அன்பு
முத்தமிட்ட மண்ணே அன்று முகஅழகு கண்ணே
மீண்டும் மீண்டும் ரசிக்கிறது என் இதயஅறை
பசுமையின் பாசறை வெள்ளம்
வழி நெடுங்கும் விவசாயி சின்னம்
விளையாட்டுக்கு பஞ்சம் இல்லை
விஞ்ஞானத்திற்கு கொஞ்சம் இல்லை
கொஞ்சி தவழும் காற்றும்
வந்து செல்லும் மழை தூரலும்
நஞ்சில்லா உணவு ஒன்று
புன்னகையே கிராமமன்று
தொட்டிலாடும் மரக்கிளைகள்
கட்டிலாடும் மூங்கில் துளிகள்
கூரை நெய்தல் வானம் எட்டுதல்
இருக்கும் இடமே நிரந்தர பீடம்
உறவுகள் ஆங்காங்கே
இன்று ஊர்கள் எங்கெங்கே
செல்வோமா மீண்டும்
கிராமத்துக் கற்பனைக்கு பஞ்சமில்லாமல்.



கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# சுயநலம்




தன்னலம் கருதி
சுயநலமாக சிந்திக்கும்
உள்ளங்களே

இன்னும் படிப்பினை
பெறவில்லையா

மறைத்த அனைத்து உண்மைகளும்
வலியாக வந்து நிற்கும் போது

உதவிக்கு கரங்கள் இல்லை
எல்லாம் சுயநலமான
சிந்தனையில் வந்த
விளைவு தான்

கண்டது எல்லாம் ஆசை
அபகரிக்கும் எண்ணம் இது எல்லாம் ஏனடா

கஷ்டப்பட்டு முன்னேறுபவரின்
கஷ்டத்தை நீ அனுபவித்தால்
புரிந்து கொள்வாய்
ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைக்கு பின்னால்
இருக்கும் அனுபவங்களை

சுயநலமாக சிந்திப்பது தவறு என்று தெரிந்தும்
தன்னலம் கருதி பிறரை பாரம் கல்லின் பக்கம்
அழைத்துச் செல்கின்றாயே இது நல்லதா?

அல்லது கெட்டதா? பொறாமையும் ஒன்றுதான்
போட்டியும் ஒன்றுதான்

சாதனை படைக்க நினைக்கிறாயா?
நல்லா வாழ நினைக்கிறாயா?

முதலில் சுயநலத்தை இல்லாமல் ஆக்கி
சிறந்த வழிமுறையை நடத்து
சிறந்த சமுதாயத்தை உருவாக்கு

வழி கேடு என்பது உன்னை ஒரு நாளும்
நல்ல வழிக்கு அழைத்துச் செல்லாது

தன் வாழ்க்கையை அழித்துக் கொள்வது என்பது
சுயநலம் மட்டும்தான்

ஒற்றுமையில் இருக்கும் இன்பமும் வெற்றியும்
ஒரு நாளும் உன் சுயநலத்தில் இருக்காது

கவிஞர் சபியா பானு,கம்பஹா

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே!
முகலும் தமிழே!!

# சிலப்பதிகாரம் (இருபத்தொன்று)

20. வழக்குரை காதை :

1. கோப்பெருந்தேவி, தீய கனவுகள் :

நீதி கேட்பதற்காக கண்ணகி பாண்டியன் அரண்மனை சென்றாள்
வீதி வழியே கோப்பெருந்தேவி சகல பரிவாரங்களுடன் சென்றாள்
பீதியுடன் தான் கண்ட தீய கனவுகளால் அவள் பயந்து நடுங்கினாள்
தீது இல்லாமல் அனைவரும் அரச சபையில் மன்னனை வரவேற்றனர்

தீய கனவுகள் :

வாயிலில் கட்டியிருந்த காவல் மணி ஒலித்துக்கொண்டே இருந்தது
கோயில் போன்ற வெண்கொற்றக் குடை சாய்ந்து தரையில் விழுந்தது
தாயினும் சிறந்த செங்கோல் மன்னனின் கைகளில முறிந்து விழுந்தது
வானில் பகல் பொழுது இருட்டாக நட்சத்திரங்கள் எரிந்து விழுந்தன

மகாராணி முடிவெடுத்தாள் ,'' தீங் கனவை அரசருக்கு கூறவேண்டும்
தகாத செயல் என்னமோ நடக்கப் போவதை உறுதியாக நம்பினாள்
விகாரத்துடன் மன்னனிடம் பொல்லாத சொப்பனத்தைக் கூறினாள்
முகாந்திரம் இன்றி ஆவேசமாக கண்ணகி சபைக்குள் நுழைந்தாள்
(விகாரம் : மனக்கலக்கம் )

2. அரசன்முன் கண்ணகி :

"கவனி! காவலனே, கணவனை இழந்த பெண்ணொருத்தி வந்துள்ளேன்
புவனி ஆளும் அரசனைக்கான சிலம்புடன் வந்திருக்கிறேன் எனக் கூறு"
அவனிடம்மறக்காமல் சொல் நீதிநெறி தவறியவனுக்கு ஆட்சி ஒரு கேடா
அவனியாளும் அரசனிடம் தலைவணங்கி நின்ற காவலன் உரைத்தான்

கொற்கை நகர் தலைவா வாழ்க! பழிச்சொல் சாராத அரசே வாழ்க!
கொற்றவையே நேரில் வந்ததுபோல் வந்திருக்கும் கன்னிகை அவள்
மாற்றுக்குறையாத சிலம்பினை கையில் ஏந்தி வந்திருக்கிறாள்
"சாற்றுதல் எதுவாயினும் உடனே அவளை அழைத்துவா" அரசன்.
( சாற்றுதல் : சொல்லுதல்)

3. கண்ணகி மன்னனோடு சாடுதல் : ( மோதுதல்)

"நீர்வார் கண்ணே! எம்முன் வந்தாயே !
யாரையோ நீ! மடக்கொடி யோய் ! என — மன்னன்
"தேராமன்னா செப்புவது உடையேன்..." கண்ணகி

"உறாவுதல் அறியாத மன்னனே, நான் யார் எனக் கேட்கிறாய் ( வருத்தம்)
புறாவின் துன்பம் தீர்த்த சிபிச் சக்கரவர்த்தி ஆட்சி செய்த புகார்
கறார் மகனை தேரில் கொன்ற மனுநீதி சோழன் ஆட்சி செய்த புகார் (உறுதி)
பிறரால் குற்றம் சொல்லமுடியாத,"பெரும்பெயர்ப் புகார்என் பதியே"




புகழ் பெற்ற வணிகன் மாசாத்துவான் மகன் கோவலன் என் கணவன்
வாழ்தல் வேண்டி, எனது கால் சிலம்பை விலைபேச உம்மூர் வந்தான்
இகழப்பட்டான் கள்வன், விதித்தது மரணதண்டனை, நீதி பொய்த்த்தே
"இழிதொழில் செய்தவனை தண்டித்தல் நீதி தானே, இதில் ஏது அநீதி!"

என்காற் பொற் சிலம்பு மாணிக்கப் பரல்களை உடையது அறிவாயா நீ
உன் கூற்று மெய்யானால் அரசியின் சிலம்பு முத்துக்களால் ஆனது
தன் சிலம்பை தரையில் வீசி உடைக்க மாணிக்க மணிகள் சிதறின
முன் எகிறிய பரல் ஒன்று மன்னன் நெற்றியில் பட்டுத் தெறித்தது

"பொன் செய்கொல்லன் சொல் கேட்ட யானோ அரசன் யானே கள்வன்
யான் நீதி தவறினேன் என் ஆயுள் கெடுக" படியில் உருண்டு மாண்டான்
வான் பொய்த்தாலும் நீதி பொய்க்காத கொழுநன் முறைகண்டாள்
நான் வாழ்ந்து பயனென்கொள் தானும் விழுந்து உயிர் துறந்தாள் தேவி
வழக்குரை காதை நிறைவுற்றது

தொடரும்...

கவிஞர் ந.திருக்காமு

# மனமே! ஓ மனமே!

இன்னல்கள் ஆயிரம் கடந்தே செல்கிறேன்
மன சன்னலைத் திறந்தே வைக்கிறேன்
கேள்விகள் அனைத்தும் நெஞ்சை உடைக்கும்
வேள்வியாய் ஏற்றே தோல்வியைக் கடக்கிறேன்
கடுஞ்சொற்கள் என்மீது அம்பாய் பாயும்
விடும் கணைமீதும் கோபம் இல்லை
விழுந்த இடத்தில் எழுந்து நிற்கும்
வீரிய விதையாய் முளைத்து நிற்பேன்
அவமானம் தாங்காமல் வெகுமானம் கிடையாது
நெஞ்சுக்கு நீதியை நானே சொல்வேன்
வெட்டியபோதும் விருந்தளிக்கக் கனிதரும் மரமாய்
ஒட்டி வாழ்ந்தே சாதனை புரிவேன்.



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# மாற்றத்தை நோக்கி புதிய பயணம்

மாற்றுத்திறனாளிகள் மாற்றத்தை நோக்கி
புதிய பயணம் புதிய முயற்சி புதிய பாதை
கண்டுபிடிக்க உங்களால் மட்டுமே முடியும் என்ற
தன்னம்பிக்கையுடன் நீங்கள் செயல்படுவதை
பார்க்கும் பொழுது ஒன்று நன்றாக புரிந்துகொள்ள முடிகிறது.
ஏனென்றால் கடவுள்  உடலில் உள்ள உறுப்புகள்
சரியாக இயங்கும் திறன்  இருப்பவருக்கு கூட
மன தைரியத்தை தரவில்லை.
உங்களுக்கு மன தைரியத்தையும் தன்னம்பிக்கையும் தந்து
உங்களைப் பார்த்து நாங்கள் இன்னும்
மனதைரியத்துடனும் தன்னம்பிக்கையுடனும்
ஓட கால்கள் கடவுள் கொடுத்திருக்கிறார்
என்பதை உணரவோ
அதைவிட அதிகமாக மன தைரியத்தை உணரவோ
உங்களைப் பார்க்க கண்களையும் கொடுத்திருக்கிறார்
எங்களுக்கு உங்களிடம் இருக்கும் தைரியத்தையும்
தன்னம்பிக்கையையும் நாங்கள் உணர்ந்து
எங்கள் வாழ்வில் செயல்பட நீங்கள்  எங்களுக்கு
புத்தகமாகவும் ஊன்றுகோலாகவும் இருக்கிறீர்கள்
நீங்கள் எங்களுக்கு ஊன்றுகோலாக இருப்பது போல்
நாங்கள் உங்கள் கால்களுக்கு
ஊன்றுகோலாக இருப்போம் என்று உறுதி கூறி
ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியுடன் மாற்றத்தை நோக்கி
புதிய பயணம் பயணிப்போம் நண்பர்களே
மகிழ்ச்சியுடன்  நாங்களும் உங்களுடன் சேர்ந்து
பயணிக்க வேண்டும் என்று மனதார
இறைவனை பிரார்த்திக்கிறோம்
மாற்றத்தை நோக்கி புதிய பயணம்.




கவிஞர் ஜெ.தேவி ராஜசேகர்,சென்னை

# செங்கதிரவன்

மாலை மன்னவன்
மெல்லமாய் மங்கியே
சஞ்சரிக்கும் திசையெல்லாம்
செம்மஞ்சள் சாயங்கொண்டு
சற்றேனும் சிதையாது
சகலகலா வல்லவன் போல்
ஒப்பில்லா ஓவியனாய்
படம் அமைத்துப்
பல்லாக்கில் கம்பீரமாய்
பவனி வரும் காட்சியிலே
பாவை இவளின்
மென்பனி மனது
சொக்கி சாய்கின்றதே.

விழி பிடித்த
வான் படம் போதாமல்
உள்ளம் தொட்டதை
விட்டுச்செல்ல மனமில்லாமல்
நினைவுச் சின்னமாய்
நெஞ்சம் காக்க
அள்ளி நிறைக்கின்றாள்
நிழற்படங்களாக.



கட்டியிழுக்கும் கண்ணாளனே!
கைவிலங்கு இன்றியே
கால வரையறையும் இன்றியே
கைது செய்துவிட்டாய்
கோதை இவளை.

கவிஞர் பாத்திமா சில்மியா,மாவனல்லை (இலங்கை)

# அழிந்து அரூபமாகி

தன்னகந்தை மிகைத்து
தனிமை வளர்த்து

நெருக்கடியை உணர்ந்து
நெருப்பில் கனன்று

நெருடல்களில் உழன்று
நிம்மதி இழந்து

மனமிருகம் கசிந்து
மௌனம் தின்று

புனிதம் கழிந்து
புன்னகை இழந்து

பிம்பம் தொலைத்து
பிதற்றலே கதியாகி

சபிக்கப்பட்டவனாக மாறி
சிலுவை சுமந்து

வாடித்தளர்ந்து
வற்றாத கண்ணீர் கொண்டு

உன்மத்தம் சூழ்ந்து
உருகி வழிந்து

இருளோடு இருளாகி
அழிந்து அரூபமாகி

மறைந்து போவதே
நேசமின்றி வாழ்வது!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# அவனின் ஞாயிறு

ஞாயிற்றுக்கிழமை
ஓய்வென்பது அவனது
அழுத்தமான வாழ்வில்
அங்கமற்று போய்விட்டது
அன்றுதான் அவனுக்கான
வேலைப்பளு அதிகமாகிறது.

ஞாயிறுதானே பிள்ளைகளிடம்
பேசலாமே என்ற
மனைவியின் கேள்வியின்
நியாயத்தை எப்படி
சமாளிப்பானோ?
வெளிநாட்டு வேலையில்
ஞாயிறும் திங்களும்
வேறுவேறல்ல
இரண்டுமே வெளிச்சம்
தருபவையே!

மேலதிகாரிகளின் கருணையென்பது
8 மணியளவில் தொடங்கும்
பணியினை 8.30க்கு
தொடங்க அனுமதிப்பது ஒன்றே
ஓங்கும் சுத்தியலின்
வேகம் குறைய வாய்ப்பில்லை
சுழலும் உடலின்
சுழற்சி குறையப்போவதுமில்லை.

இதையென்றும் அறிவதில்லை
அம்மாக்களும் காதலிகளும்
மனைவியும் காலத்திற்கும்.



கவிஞர் மூவலூர் தமிழ்,மயிலாடுதுறை

# எந்தமிழே! வாழியவே!

மூத்த மொழியே
மூவா தமிழே
கற்பகத் தருவே
கருகா மரமே.

கடலிலே மூழ்கிய
கண்டமதிலே எஞ்சிய
சொற்களிலேயே இத்தனை
அழகுடன் மிளிரும்
ஈடில்லா மொழியே.

அன்று முதல்
இன்று வரை
தலைமுறைகள் பல
கடந்தாலும்
கன்னித் தமிழாய்
மிளிரும் இளந்தமிழே.

இயலாகி இசையாகி
நாடகமாகி எங்கும்
நிறைந்து எதிலும்
ஆளுமை செய்கிறாய்.



வல்லின மெல்லின
இடையினமாக வளைந்து
நெளிந்து வரும் தமிழ் நதியே
உன்னை அள்ளிப்
பருகாத பாவலர் உண்டோ!

சங்கம் முதல் இன்றுவரை
இலக்கியங்களாக
இலக்கணங்களாக
அகமாக புறமாக
ஆத்திச்சூடியாக
எத்தனை வடிவங்களிலே
வலம் வந்திருக்கிறாய் நீ!

செம்மொழியே
உன் சிறப்பான நடையிலே
சிலையும் உயிர்பெறுமே
கல்லும் கவிபாடுமே!


செந்தமிழே
உன் சிறப்பை
என் கவிக்குள்
கொணர இயலுமா?

செம்மொழியே
வேரூரின்றிய நாள் முதல்
வீறு கொண்டு நடக்கும்
எந்தமிழே
வாழிய! வாழியவே!

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன்,கோவை மாவட்டம்

# வேண்டுதல்

பிழைக்க வழி தேடி குளத்தை தான்மூடி
பிளாட்டுகள் தானமைத்து கோபுரமாய் கட்டிடங்கள்.
ஒதுங்க மரமின்றி நிழலுக்கு வழியின்றி
கான்கிரீட் நாகரீகம் இன்று நீருக்குள் மிதக்கிறது.
கூவமும் அபார்ட்மென்ட்டும்
ஒன்றுக்குள் ஒன்றாக நீருக்குள்ளே.
சமரசமாய் வீதியிலே
நீர் வடிய நிற்கிறது.
வானமதும் கோபமுற
புயல் மழை கரங்கள் கொண்டு
புரட்டி அடித்த கோராமிது
தெருக்களும் வீதிகளும் சிற்றாராய் தான்மாற
கடலும் வீடும்
ஒன்றாக தான் சேர
தற்கால அகதிகளாய்
நாளில் மாற்றும் இயற்கையுமே
மீண்டும் சொல்லும் பாடமொன்று
இனியும் என் வழி மறிக்காதீர்கள்
மரம் வளர்க்க மறக்காதீர்கள்
உங்களை காக்கும் என்னை
என்றும் அழிக்க நினைக்காதீர்கள்!
மீறினால்
தண்ணீரில் மிதக்கும் உங்களை
கண்ணீரில் மூழ்க வைக்க
கன நேரம் போதுமெனக்கு.



இப்படிக்கு,
இருகை கூப்பிடவேண்டும்
வேண்டும் இயற்கை.

கவிஞர் மு.சரவணன்,மயிலாடுதுறை

# இவன் என்னும் நான்

வலிகளில் கிறுக்கிய வரிகளை கவிதைகளாக்கி
விழிகளில் விழுகிற துளிகளை புள்ளிகளாக்கி
காலத்தின் அனுமதியுடன் அனுபவம் பெற்று
வாழ்க்கையின் சுவரில் வரைந்த ஓவியம்
இவன் என்னும் நான்.



கவிஞர் கோ.தனுசன்,மட்டக்களப்பு(இலங்கை)

# விடியல் தேடும் விண்மீன் பெண்ணே

விடியல் தேடும்
விண்மீன் பெண்ணே!
விழப்போகும் இருளுக்கு
விளக்கேற்றிட வந்தாயோ?

மேகக் கூட்டம்
மேனியெல்லாம் சூழ்ந்திட
மேலவனின் வரம்
மேவி காத்திருந்தாயோ?

மின்மினுப்பாய் கண்சிமிட்டும்
மின்னலின் தங்கையே
மிதந்தே எதைத்தேடுகிறாயோ
மிளிரும் ஒளி வெள்ளம் கொணரவோ?

நிலாப் பெண்ணை காதலிக்க
நிற்க இடமின்றி வலம் வருகிறாயோ?
நிழல் கிடைக்காத பயணியின் தாகமாய்
நிகழ்வுகளை எதிர்பார்த்தே
காத்திருக்கின்றாயோ?



ஊடுருவிப்பாயும் எரிநட்சத்திரமாய்
ஏக்கத்திலே உருகி
ஏங்கும் உள்ளத்தோடு
ஏனிந்த பயணமோ?

கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# பணமும் உறவும்

சித்தரிக்கப்படாத உண்மை கோட்பாடு மறந்து
நேர்கோட்டுப் பாதை ஏதென்று அறியாமலே
வாழ்க்கை பயணம் தொடர்கிறது எமக்கு
எதனை யாசிக்கிறது இந்த வாழ்க்கை
எதைச் சுவாசிக்கிறது எம் மனது
சிந்தை ஒன்றாகி செயல் வேறாகிடும் போது தானே
தவறாகிப் போகிறது நினைத்த யாவும்
விரைகிற நேரங்கள் மீண்டும் வரப்போவதில்லை
கரைகிற கணங்கள் மீண்டும் கிடைக்கப்போவதில்லை
நகர்த்தப்பட்ட நாட்கள் பொழுதாகி மீண்டும் வருவதில்லை
நொறுங்கிய நொடிகள் நிலையானதாகி
மறுமுறை கொடுக்கப்படுவதில்லை
நிலை இல்லா உலகு இது
கண்ணாடி துகளாய் சிதறலாகிடும் ஓர்நாள்
கணப்பொழுதில் மாயமாகிடும்
எதைச் சேர்க்கப் பழகினோம் உடைமைகளையா?
எமக்கு ஒன்றாகிப் போனால்
இந்த உடைமைகள் நிலையாகத் தான் இருக்கும்
கிடைக்கோடு நிலைக்கோடாக நிமிருமா
இந்த சாய்வுக்கோடு சரியுமா
புரியா மனிதன் ஓடோடி
இளமையைக் கரைத்து; வயதையும் உயர்த்தி.
உடைமைகளையும் சேர்த்துக் குவிக்கிறான்
அவனுக்கு நோய் ஒன்று சூடிக் கொண்டால்
சேர்த்தது எல்லாம் அவனுக்கே அழிந்தே மாண்டிடும்
அவன் இளமை திரும்பிடுமா
தொலைத்த யாவுமே மிண்டாகிடுமா
மனிதா தொலையாதே நீ; தொலைக்காதே நீ
உறவுகளை சேர்த்திடு ; உணர்வுகளை மதித்திடு
மிதிக்கப்பட்டாலும் சிலிர்த்துக் கொண்டு
தலைநிமிரும் புற்செடிகளைப் போல
பணத்தோடு உறவுகளையும் சேர்த்துக்கொள் மனிதா!



கவிஞர் சஹ்னாஸ் பேகம்,புத்தளம்(இலங்கை)

# அந்திவானம்

தேகம் வருடிப் போகும்
குளிர் தென்றல்!
கூடடையும் பறவைகள்!
சில்வண்டின் ரீங்காரம்!
வானில் தவழ்ந்து வரும்
மேகக் கூட்டம்!
நிலவுக் காதலன்
உலா வரும் நேரமிது!
நானிலத்து நாரிகளின்
கன்னச் சிவப்பெடுத்து
அங்கம் எங்கும் பூசி
சிவந்ததோ அந்த
அந்திவானம்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# திசம்பர் 04.2023 பெரு நகர வெள்ளம்

மழை நீர் நிரப்பிய
குடியிருப்பு வளாகம்!

சிணுங்கிய அலைப்பேசி
தூக்கம் தழுவியது!

அல்லங்காடி தெரு
அரவமற்று நின்றது!

பெருநகர இரைச்சல்
குறைத்த மாமழை!

இறுக்கம் நீக்கி
இணக்கம் தந்த சுற்றம்!



கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு



அகர முதல

# எங்கே விடியல்?

வடியாத வெள்ளம் தேடுகிறது வடிகால் வாரியத்தை.
விடிந்தாலும் கிடைக்காது; மடிந்தாலும் கிடைக்காது.
கையூட்டு கபோதிகளின் மையெழுத்து செய்த சதி.
பெருக்கெடுத்து ஓடுகிற மழைவெள்ளத்தில்.
தண்ணீரில் அழுத மீன்களின் கண்ணீராய்.
ஏழைகளின் கண்ணீரும் கலந்து ஓடுகிறது.
அடுத்து வாரத்தில் அவசியம் சுவைத்துப் பாருங்கள்.
அதிக உவர்ப்புத்தன்மையில் கடல்!
அடிக்கடி பேரிடர் நெருக்கடி சந்தித்து
எதுவும் நடவாது போல்
விடியலில் எழுந்த பொழுதாக
நடைப்போட்டு பழகும் நம்மின மக்கள்.
வீழ்வது வெட்கமில்லை; வீழ்ந்து கிடப்பதே வெட்கமென
போராட்ட குணத்தை தள்ளி வைத்து
பொழுதோட்ட போக புறப்படும் நம்மின் மக்கள்.
கொஞ்சம் நஞ்சமில்லை
நிவாரண நிதியில் கொள்ளையடிக்கும் கூட்டம்
கழுகாக காத்திருக்கு.
இராமன் ஆண்டாலும்; இராவணன் ஆண்டாலும்
என் உழைப்பு; என் பொழைப்பு இருமாப்போடு பேசி.
பொழைக்கத் தெரியாத ஏமாளிகள் நம்மின மக்கள்.
கட்டுக் கட்டாய் களமிருக்கும் கருப்பு பணம்
தப்பித் தவறி கூட ஆபத்துக்கு வருவதில்லை
அவசரத்துக்கு; உதவவில்லை.
விற்கப்படும் ஓட்டுகளுகே விலைபேசப்பட்டதென தெரிந்தும்.
இலவசங்களுக்காக ரேஷன் கடையில்
எனக்குப் பின் உனக்கு முன்
சண்டைப்போடும் தன்போன்ற சாமான்யனோடு.
எதிர்த்துக் கேட்க துப்பில்லை.
எந்தக் கட்சியையும்
இந்த சுற்று உன்னுடையது; அடுத்த சுற்று என்னுடையது.
இடையில் யாருக்கும் நுழைவிடம் இல்லை.
நுழைந்தாலும் விட்டுவிடுவதுமில்லை.
எல்லாம் தெரிகிறது. அனைத்தும் புரிகிறது.; யாவும் அறிகிறது.
இருந்தும் பயன் என்ன? நம்மின மக்களுக்கு!



கவிஞர் திருமதி மோ.கோமளாநேதாஜி

# தீயசக்திகள்

எட்டுதிட்டுதிக்கிலும்
அமைதிக்கான நிலைகளம் சற்றும் இல்லை
தான் என்ற அகங்கார மாமந்தை கண்ணை மறைத்து
எமக்கானது.
என்னை சார்ந்தது
கையக படுத்த முடியாதது
பயிரை அழிக்கும் களைகள் இவை.
கண்ணை பழுதாக்கும் விசகிருமிகள் இவை.
பார்ப்பது அனைத்தும் நாடகமேடை
நயவஞ்ச சொல் சாடை
மக்களின் நலன்
சொத்து , மண், வாக்கு என்பதற்கான உன்னத பூமி.
ஏன் இந்த பொய்பித்தலாட்ட வஞ்சககூட்டம் ?
படுபாதாள குழியில் அனுபவம் பகிர
மீண்டும் ஒருமுறை ஆசை போலும்.
கிடைத்த நியதியும் நீதியின் முன் சரணடைவும்
கண்முன் நிகழும் முன்னுதாரணங்களும்
போதாத உனது கோலத்திற்கு.
கோடி புண்ணியமாய் போகும்
எம் வழியில் எம்மிடத்தில் சுதந்திரம் காற்றை அனுபவிக்கவிடு.
காலத்திற்கு மட்டும் காலை பிடிக்கும்
கயவ அரங்கு இங்கு வேண்டாம் இனியும்.



கவிஞர் வியாத்தன் ச.லக்ஷ்ஹரன்

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# தலவிருட்சம்

சாந்திவனம் என்று பெயர் கொண்ட
அந்த ஓட்டு வீட்டிற்கு
தலவிருட்சம் என்பது வாடாச்சி மரம் தான்
இதை ஊரில் வாதம் முடைக்கி மரம் என்று சொல்வார்கள்,
வீட்டைச் சுற்றி வேலிக் கட்டவும், மாடுக் கட்டவும்,
மிதிவண்டிகளை நிறுத்தவும்
ஊன்றுகோல் போல இருக்கட்டும் என்று
நட்டு வைத்து கம்புகள் எல்லாம் மரங்கள் ஆயின

அதன் கொப்புகளை உடைத்து
நாங்கள் தும்பிகளை வேட்டையாடியது உண்டு
வாள் சண்டை போடவும் பயன்படுத்துவோம்
அம்மா, அப்பாவுக்கு தெரியாமல்
இந்த வாடாச்சி மரங்களின் உச்சானிக்கொம்பு வரைச் சென்று
காக்காக் குஞ்சு பிடிச்சதும் உண்டு

வீட்டை சுற்றியிருக்கும்
இந்த வாடாச்சி மரங்களின் இலைகளைக் கண்டு
தினமும் ஆடுகள் விசாரித்துப் போவது உண்டு - கோல்கேட்
வெறும் பல்பொடியாக மட்டும் இருந்த காலத்தில்
அதைக் கீழேக் கொட்டி விளையாடியதற்கு
அப்பாவிடம் வாடாச்சிக் கம்பில் அடி வாங்கினது உண்டு



மழையில் நனைந்ததற்காய்
லட்சுமி அத்தையிடம் ஒரு முறை வாடாச்சி
அடி வாங்கியதும் உண்டு
பெரியக் குழித் தோண்டி
அதில் வாடா மர இலையும் கிளைகளையும் போட்டு
நண்பர்களை கண்ணைக் கட்டிக் கூட்டிட்டு வந்து
குழியில் இறக்கி விட்டு விளையாடுவதும் உண்டு

பெரியவர்கள் யாராவது போய் சேர்ந்து விட்டால்
இளவட்டங்கள் சர, சர வென்று மேல் ஏறி
திருநெல்வேலி அருவாவால்
நல்ல வாட்டமான கம்புகளை வெட்டி பாடைக் கட்டியது உண்டு
இந்த வாடா(ச்சி )மரத்திடம்
நிறைய கற்றுக்கொள்ள வேண்டும்
எப்படி வெட்டிப் போட்டாலும் வளர்ந்து விடும்
தனியே தண்ணீர் உரம் என்று எதுவும் தேவையில்லை
மரமும் அதன் குணம் மாதிரியே மிருதுவாகவே இருக்கும்

இப்பொழுது ஊருக்கு போகும்போதும்
வாடாச்சி மரங்கள் தென்படுகிறதா? என்று சொல்லிப் பார்க்கிறேன்
வாய்ப்புகள் கொஞ்சம் குறைவாகத் தான் தெரிகிறது

கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# பெண்ணே

உடலால் உறுதியாக நீ
உள்ளதால் இல்லை நீ
உன்னை புரிந்து கொள்ள நீ
ஊருக்குள்ள என்ன சொன்னாலும்
உன்னுடைய வலி உனக்கு மட்டும்
உழைப்பை மட்டும் நம்பு
உனக்கு உண்மையாக இரு
உயர்வாய் ஒருநாள்
பெண்ணும்!



கவிஞர் ஸ்ரீவள்ளி,கோவை

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே!
முகமும் தமிழே!!

# முதிர்க்கண்ணன்

குடும்பத்தில் மூத்தவனாய்
குன்றாத சுடரொளியாய்
அடுகடுக்கான சுமைகள்
அனைத்தும் சுமந்தவனாய்



உடன் பிறப்புக்களை
உரிமையோடு ஆளாக்கி
கடமையினைச் செய்யும்
கர்ணணன் இவன்

தன்னை அர்பணித்து
தாளராது வாழ்வான்
துன்பம் வந்தாலும்
துவளாது காப்பான்

குணத்தால் குபேரன்
குறையில்லா குணாளன்
பிணமாய் நடந்தாலும்
பிரியமான பித்தன்

வயதும் கடக்கும்
வாழ்வும் தொலைக்கும்
அயராது உழைக்கும்
அனைவரின் அன்பானவன்

பிறருக்காய் நேரத்தை
பிரியமாய் செலவளிக்கும்
அறத்தைக் கொண்ட
அழகான அரசன்

ஆசைகளை அடக்கி
ஆடம்பரம் இல்லாதவன்
மீசையிருந்தும் பாசை
மீட்டாத அமைதியானவன்

முதிர்க் கண்ணனாய்
முதுமை வரையே
கதியென போராடும்
கடவுளின் மகன்

கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி

# யாரிடமும் கேட்காதே பதில் கிடைக்காது

நீண்ட நேர கனமழைக்கு பின்
ஜன்னல் திற
வெளியே ஈரமான உலகமொன்று உள்ளது

காற்றாட நிழலோடு பயணம் கொண்டால் போதும்
இலையை நகற்றாதே
சூரியன் இறங்கி வந்து விடுவான்.

காலணிகளின் எடையேற்றி
பள்ளமுற்றது போதும்
கழற்றி வைக்காதே
கால்களில் மேடு முளைத்து விடப் போகிறது

கதவைத்திறக்காதே
உள்ளே யாருமில்லை
சிவிட்சுகளை போடாதே
காற்றாடி பழுதாகிவிட்டது

வானத்தை பார்த்து நடக்காதே
மீண்டுமொரு புரட்சி பிறப்பித்திட யாருமில்லை
வசை பேசத் தொடங்காதே
காதுகளில் போதுமான இடமில்லை



மொத்தமும் போர்த்திட்ட
மூலையில் முடங்கிய
பிண்டங்களின் செவி பிளிற
யாரிடமும் கேட்காதே பதில் கிடைக்காது.

கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# உன் மீது கொண்ட காதல்

நீ செல்லுமிடமெல்லாம்
உன்னோடு வந்தேன்
தினம் தினம்
உரசலில் தேய்ந்து
உனக்கு மட்டும் ஆனேன்.

விடியும் வரை
வாசலில் காத்திருந்தேன்
உன் மென்மையில்
மெய் மறந்து நானும்
மேதினியில் உன் மீது
தீராத காதல் கொண்டேன்.

வாரறுந்து சிறகொடிந்த
கிள்ளையாய் இன்று
வாயில் ஓரத்தில்
தனிமையில் தவிக்கிறேன்.
புதுப்புது உறவுகளுடன்
பின்னிப் பிணைந்து நீ
என்னைத் தவிக்கவிட்டு
தாண்டிச் செல்கிறாய்.



நீ தந்த வடுக்களோடு
வாசலில் ஒன்றையும்
வாசம் கொள்கிறேன்
இப்படிக்கு செருப்பு.

கவிஞர் செண்பகச் சோலையாள்,ஆய்ஷ்(கம்பளை)

அகர முதல

# கடன்

நெருக்கியடித்த கடன்களின்
நீள்கரங்கள் தின்று செரித்த
வயலுக்குள்
இரை தேடிக் கொண்டிருந்த
நாரைகளை வேடிக்கை பார்த்தபடி
களை பறிக்கிறாள்
நேற்று வரை மாடியிலிருந்தவள்.



கவிஞர் இளையவன் சிவா,நரசிங்காபுரம்

# வலிகளால் ஆன வரிகள்

தேடும் விழிகள்
ஒரு முறை கூட இமைக்காமல்
எதையோ தேடிப்பார்க்க
வழிகளைக் காணாது
விழியோடு உறவாடும்
விழிநீர் துளிர்த்திட
கண்ணீர் வழிந்தோட
சிறிது நேரம் கூட ஓயவில்லை இந்த விழிகள்
என் இதய கண்ணாடி
பல தடவைகள் உடைந்ததாலோ என்னவோ
எனக்கு ஒரே பொருள்
பல விம்பங்களிலும்
பல கோணங்களிலும் தெரிகிறது
மனநிலை சரியில்லை
தலை சாய்க்க
இடம் தருவாயா என
தனிமையிடம் கேட்டேன்
தனிமையோ
கடலிலே நீந்திவிட்டு
கரை சேர துடிக்கும்
மீனுக்கு தெரியாது
கடலை விட கரை
ஆபத்தானது என்று
நான் கரை போன்றவள்
நீயோ கடலின் அடிமை
எனக் கூறி என்னை விமர்சித்து விட்டது



கவிஞர் பாத்திமா ரிபானா ஜௌபர்,இலங்கை

# நீளும் பாதையில்

தனிமையில் மனதுபேசும்
மௌனத்தில் சிறுபூச்சியும்
காதில் பேசிக் கடக்கும்


உளரும் மனதை விரட்டி
உலாவும் பட்டாம்பூச்சி யின்
சிறகை தொட்டு உளரலாம்

சிந்திக்க நினையாது
பழைய புகைப்படம் போல
சிரித்து உறையலாம்

மலையேறும் பொழுதுகளிலும்
இலைச் சிந்தும் பாதையிலும்
பயணங்கள் நீளாதோ

கலைந்த கேசத்தை
காற்றில் கோதியபடி
கலைக்கும் நினைவுகளை
காற்றில் கரைத்தபடி
இப்படியே நீளாதோ


நீளும் பாதையோடு
நீண்டிடாதோ
இம் மௌனம்.



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# மௌனம்

மௌனம் என்பது மன நலனை
மேம்படுத்தும் ஒரு மிகப்பெரிய ஆயுதம்
சில நேரங்களில் நாம் பேசும்
வார்த்தைகளை விட மௌனமே சிறந்தது.
நாம் பேசும் வார்த்தைகளே நம்
உறவினர்களையும்
நண்பர்களையும் நம்மை விட்டு விலகிடச் செய்யும்.
ஒரு பொருளை இழந்து விட்டால் திரும்ப பெற முடியும்.
கோபத்தின் காரணமாக வார்த்தைகளை வீசினால்
சில சமயங்களில் பாதிப்போ அதிகமே!
பல நேரங்களில் மௌனமாக இருப்பதில்
எண்ணற்ற நன்மைகள் பல உள்ளனவே!
மௌனம் மன அழுத்தத்தை குறைக்கும்.
மனதை ஒருநிலைப்படுத்தும்.
தினமும் 10 நிமிடங்கள் அமைதியாக
ஒரு இடத்தில் அமர்ந்து கண்களை மூடி
மௌனமாக இருக்கும் போது
ஆக்க பூர்வமான ஆற்றல் அதிகரிக்கும்.
அடுத்தவர்கள் தங்களின் பிரச்சனைகளை
பகிரும் போது மௌனமாக
காது கொடுத்து கேட்டல் நலம்.
கேட்பவர்களுக்கும் ஆறுதல் தரும்.
கணவன் மனைவி இடையே பிரச்சனையா?
வார்த்தைகளால் சொல் அம்புகளை வீசாமல்
ஒருவர் மட்டும் அமைதியாக இருந்தால்
மற்றவர் தன் தவறை அறிய நேரிடும்.
மௌனம் சம்மதம் என்ற அர்த்தமும் உள்ளது.
பேசாதிருப்பது பெருமைக்கு அழகு
என்ற பழமொழியும் உள்ளது.



கவிஞர் ஆ.கிருஷ்ணவேணி,ஊத்தங்கரை

# மாலவனும் வைணவமும் (பகுதி 12)

## நம்மாழ்வார் (1)

வைணவநெறி பற்றாளர்! மாலவனின் ஆழ்பக்தர்!
பன்னிருவர் சீர்குழாத்து மாணொருவர் நம்மாழ்வார்!
தமிழகத்துத் தூத்துக்குடி ஆழ்வார்திரு நகர்தன்னில்
வைகாசி விசாகத்தே நிறைமதிநாள் பனிரெண்டாம்
தியதிதனில் வெள்ளிகிழமை நற்றோற்றம்! பரப்பிட்டார்
விசிஷ்டாத்வை தசமயமே! ஆசாரிய வழிகாட்டி
சீரார்ந்த சேனைமுத லிபேரினரே! யாத்தவையோ:
திருவிருத்தம் நூறோடு திருவாசிரி யமெட்டோடு
நற்பெரிய திருவந்தாதி எண்பத்து ஏழதுவும்
திருவாய்மொழி ஆயிரத்து நூற்றோடு இரண்டமைய
பாசுரங்கள் ஆயிரத்து இருநூற்று தொண்ணூற்று
ஆறாகும்! நால்வேதம் தீந்தமிழில் பாடியதால்
வேதமுழுதும் தமிழ்செய்த மாறனானார்! கம்பர்காண்
சடகோபர் அந்தாதி நாயகனாய் ஒளிர்பவரே!
பெருமாளைச் சேவிப்போர் தீர்த்தமொடு சடாரியதும்
துழாயதுவும் பிரசாதம் எய்துவரே! சடாரியெனும்
சடகோபன் பெயரதுவும் இவர்க்குண்டே! நேரமைந்த
சீடர்களோ மதுரகவி நாதமுனி என்றிருவர்!
நற்றாதை நெல்லைசார் பொன்னிகரை திருக்குருகூர்
பொற்காரியார் என்பவரே! ஈன்றதாயோ சேரநாட்டு
திருவெண்பரி சாரமன்னர் மகளான உடையநங்கை
பேரினளே! சீர்பாண்டி மரபினராம்! திருமால்தன்
படைத்தலைவர் விக்ஷத்சே னர்தம்மின் அம்சமவர்!
யானைதனை நேரடக்கும் அங்குசமாய்; பரனாகிய
திருமாலுக் கானதனால் பராங்குசரே! தன்னையே
தலைவியாக வரித்துபாடும் போதவரே நல்பராங்குச
நாயகியாய் தாமமைவார்! திருக்குருகூர் நம்பியுரை
கோயிலமை புளியமரத்தே ஈரெட்டு ஆண்டளவும்
சலனமிலாத் தவமிருந்தார்! நம்மாழ்வார் பாசுரத்தால்
மாலருளைப் பெற்றுயர்ந்து; வைணவராய்த் திகழ்வோமே!



நம்மாழ்வார்

தொடரும்...

கவிஞர் கணக்காயன்(இ.சே.இராமன்)

# இருவருக்கும் கிடைக்காத காதல்


தொலைந்த டைரி

தேடிப்போன காலங்கள்
ஆண்மையின் முதல் காதல் நினைவுகள்.

அவனுக்கு பொக்கிஷம்
ஆயினும் மனைவிக்கு!?

எண்ணற்ற எழுத்துக்களை
பதித்து தொலைந்தாளாம்.
அவன் நினைவில் காரிகை முழுவதும்.

இருப்பினும் பேதை அவள் வாக்கியம்
செவிக்கும் எட்டாது
விழிக்கும் எட்டாது போயிட.




கிடைக்காத ஏக்கத்தில் ஆடவனும்
கிட்டாத காதலை பொக்கிஷமாய்
கற்பனையில் சித்தரிக்கும் மடவாரும்.

சிறந்த ஜோடியான வாழ்க்கை

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# மறந்த காதலி மறவாத காதல்

நெற்றி சுருண்ட முடி
கொலுசு சத்தம்
குழந்தை சிரிப்பு
கருப்பு நிறம்
இவைகளை காணும்போது
மறந்த காதலியே கண்முன் வருகிறாள்.
மறவாத காதலால்.



கவிஞர் ரா செல்வா,சிதம்பரம்

# மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்

மரம் நடு மனிதா மரம் நடு!
மும்மாரி பொழிந்திட மரம் நடு!

பகட்டான சாலை வேண்டி நீயும்
நாகரிக மோகமதில் சிக்குண்டு கிடக்காதே!

அழகிய சாலை தயார் செய்திட
மரங்கள் அழியும் என்பதை மறவாதே!

மரங்கள் அழிந்திட்டால் நமக்கு
மழை பொழிந்திட வாய்ப்பில்லையே!

மழை பொழியாது போயிடின்
பசுமை என்றும் நிரந்தரமில்லையே!

இலை தழைகளின் அசைவில்
லயித்து உன்னை நீ மறந்திடு!

கிளைகளில் தூளி கட்டி
ஆடும் மழலைகளை நினைந்திடு!

சின்னஞ்சிறு குருவிகளும் அணில்களும்
தங்குமிடம் மரம் தான் என்று உணர்ந்திடு!

மரம் நட்டு நீயும் உன்
எதிர்கால சந்ததிக்கு உதவிடு!

மரங்கள் பல நீயும் நட்டிட அதில்
வந்திடும் கனிகளை குருவிகளும் சுவைத்து

பறந்து செல்லும் பறவைகளின்
எச்சமதில் விழும் விதைகளும் மரமாகுமே!

இவையெல்லாம் திறம்பட நடந்திட
மரந்தனை நட்டிடு நீயும்!



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# வாழ்க்கை என்னும் கவிதை

அத்தியாயம் -14

பயணம் எப்படி?



மும்பையில் தாதருக்கு ரயில் வந்ததும் எல்லோரும் இறங்கிக் கொள்ள, சிவா ஒரு டாக்ஸி பிடித்து வரிசையாக எல்லா சாமான்களையும் ஏற்றிக் கொண்டு "சாக்கி நாக்கா சலோ" என்றான்.

இரயிலில் இரண்டு பகல் ஓர் இரவு பயணம் செய்ததில் மிகவும் களைப் படைந்து போயிருந்தாள் புவனா. ரயில் வந்து சேர, இரவு பதினோரு மணியாகி விட்டதால் திவ்யா தூங்கிப் போயிருந்தாள்.

சிவாவின் வீட்டின் முன்னே டாக்ஸியை நிறுத்து பொருட்களை இறக்க ஆரம்பித்தான் திவாகர். புவனாவின் கைப்பையை வாங்கி சாவியை எடுத்து வீட்டைத் திறந்தான் சிவா.

"இப்போதுதான் ஊரிலிருந்து வருகிறீர்களா?" பக்கத்து வீட்டு குஜராத் பெண்மணி இந்தியில் கேட்டாள்.

"ஆமாம்" என்று சொல்லி விட்டு புவனாவை வீட்டிற்குள் போகச் சொல்லி திவ்யாவை வாங்கி கட்டிலில் படுக்க வைத்தான்.

எதிர் வீட்டு பெண்மணிகள் இருவர் வந்து பயணம் எப்படி இருந்தது என்று ஆங்கிலத்தில் விசாரித்துக் கொண்டிருந்தனர்.

பக்கத்து வீட்டினர் பலரும் வந்து விட, சிவா எல்லோரிடமும் ஹிந்தியில் குசலம் விசாரித்தான்.

"இவ்வளவு லேட்டா வந்திருக்கீங்க சாப்பிட்டிருக்க மாட்டீர்கள். நான் கொஞ்சம் சாப்பாடு கொண்டு வந்திருக்கிறேன். சாப்பிடுங்கள்" என்றாள் ஒரு கோவா பெண்மணி.

எல்லோரும் புதிதாக வந்திருந்த புவனாவைக் காட்டி பேசிக் கொண்டிருந்தனர். சாப்பாடு கொண்டு வந்த ரோஸி "இது யார்?" என ஆங்கிலத்தில் கேட்டாள்.

"என் மனைவி" என்றான் சிவா. "ஊரில் அப்பா அம்மா மிகவும் வற்புறுத்தியதால் திருமணம் செய்ய வேண்டிய சூழ்நிலையாகி விட்டது. திவ்யாவை வேறு கவனிக்க வேண்டுமல்லவா" என்றான் சிவா.

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

## அத்தியாயம் -14

## பயணம் எப்படி?

ரோஸிக்கு முகம் சுருங்கிப் போனது. சாப்பாட்டை வைத்து விட்டு புவனாவின் அருகில் வந்து அவள் கையைப் பிடித்து குலுக்கி விட்டுக் கிளம்பினாள்.

எல்லோருக்கும் ரோஸி புவனாவை அறிமுகப்படுத்தினான் எல்லோரையும் நின்றபடி கும்பிட்டாள் புவனா. எல்லோரும் சிவா மனைவி இறந்த உடனே இப்படி இன்னொரு பெண்ணைக் கட்டியிருக்கக் கூடாது" என்று முணுமுணுத்துக் கொண்டே கிளம்பினர்.

"எனக்கு பசிக்க வில்லை. திவ்யா நீயும் புவனாவும் சாப்பிட்டு விட்டுத் தூங்குங்கள். நான் மேலுக்கு குளித்து விட்டு வருகிறேன்." என்று டவலை எடுத்துக் கொண்டு பாத்ரூமிற்கு கிளம்பினான்.

புவனா எழுந்து கையைக் கழுவி விட்டு ரோஸி கொண்டு வந்த உணவை சிவாவிற்கு பரிமாறி விட்டு

"அத்தான் நான் முன்னாலே வராண்டாவில் படுத்துக் கொள்கிறேன்." என்று சிவாவிடம் சொல்லி விட்டு தலையணையும் போர்வையும் எடுத்துக் கொண்டு திவாகர் வெளியே வந்து படுத்துக் கொண்டான்.

@@@@@@@@@@@

காலையில் திவாகர் வேலைக்குப் போக வேண்டுமென்று வேகமாகக் கிளம்பிப் போய் விட்டான்.

சிவா மெதுவாக எழுந்து புறப்பட்டப் போது, அவனுடைய காய்கறிக் கடையில் வேலை செய்கிற பையாக் காரப் பையன் வந்து "சாப் ஹை" என்று கேட்டான்.

புவனா அந்தப் பையன் கேட்டதுப் புரியாமல் "அத்தான் யாரோ வந்திருக்கிறார்கள்" என்றாள்.

"ஆவ் திவாரி, துக்கான் ஹைசா ஹை" என்றவன் "புவனா இது நம்ம கடையிலே வேலை செய்கிற பையன்" என்றவன் ஒரு டாக்ஸி வரவழைத்து தேங்காய் மற்றும் முருங்கக் காய் மூட்டைகளை ஏற்றிக் கொண்டு "புவனா நீ திவ்யா எழுந்த்தும் குளித்துப் புறப்படுங்க. இன்றைக்கு ஒரு நாளும் வெளியே சாப்பிட்டு விட்டு சமையலுக்கான பொருளெல்லாம் வாங்கி விட்டு வரலாம்" என்று சொல்லி விட்டுக் கிளம்பினான்.

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

## அத்தியாயம் -14

## பயணம் எப்படி?

திவ்யா எழுந்ததும் பால் கலந்து கொடுத்து விட்டு புவனா குளிக்க கிளம்பிய போது, "பேர் என்ன?" என்று ஆங்கிலத்தில் கேட்டுக் கொண்டே வந்தாள் ரோசி.

ரோஸிக்கு மொழி புரிய வில்லை. "இந்தி, இங்கிலீஷ் நோ" என்றாள் சைகை காட்டியவாறு.

"ஓ..." என்று புரிந்து கொண்ட ரோஸி இவளுக்குப் புரிய வேண்டும் என்று கூட எதிர் பார்க்காமல் கடகடவென்று ஆங்கிலத்தில் வேகமாகப் பேசிக் கொண்டே போனாள்.

ரோஸி ஆங்கிலத்தில் பேசியது புரியாவிட்டாலும், அவள் திவ்யாவையும் போட்டோவிலிருந்த தேவகியையும் மாற்றி மாற்றிச் சொன்னதிலிருந்து, அவளுக்கு தேவகியையும் திவ்யாவையும் நன்கு தெரியுமென்று, தேககி இறந்ததும் சிவாவை எப்படியாவது திருமணம் செய்துக் கொள்ளத் துடித்த தாகவும் அவள் சொன்னதிலிருந்து புரிந்தது.

'சிவா அத்தான் வந்ததும் இதைப் பற்றி கேட்க வேண்டும்' என்று நினைத்துக் கொண்டாள் புவனா.

கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்த ரோஸி, கடிகாரம் பார்த்து விட்டு தான் ஒரு பள்ளிக்கூட டீச்சராக இருப்பதாகவும், உடனடியாக ஸ்கூல் போக வேண்டியதிருப்பதால் மாலையில் வந்து பேசுகிறேன் என்று சொல்லி விட்டு கிளம்பினாள்.




தொடரும்...

இரஜகை நிலவன்

# மீனாட்சிசுந்தரம் பிள்ளை

## கட்டுரை

**சிறப்பு :**



மகாவித்வான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. (ஏப்ரல் 6, 1815 - பிப்ரவரி 1, 1876) (திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு) தமிழறிஞர், பழந்தமிழ் இலக்கியங்களைப் பயிற்றுவித்தவர், உ. வே. சாமிநாதையரின் ஆசிரியர். திருவாவடுதுறை ஆதீன வித்வானாக பணியாற்றியவர். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாண தேசிகர் இவருக்கு 'மகாவித்வான்' என்ற பட்டத்தை அளித்துச் சிறப்பித்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் உருவான தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்திற்கு இரண்டு வகையில் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பங்களிப்பாற்றினார். நூற்றுக்கும் மேலான தலபுராண நூல்களை இயற்றினார். தமிழ் கற்றவர்கள் பலர் நவீனக் கல்விமுறைக்குள் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் ஆசிரியர்களாக வந்தனர்.

**பிறப்பு, படிப்பு :**

மீனாட்சிசுந்தரம்பிள்ளை திருச்சி அருகே உள்ள எண்ணெயூரில் 1815-ல் பங்குனி மாதம் வியாழக்கிழமையில் பிறந்தார். இவரின் பெற்றோர் சிதம்பரம் பிள்ளை -அன்னத்தாச்சி. தமிழ்ப் புலவரான தனது தந்தையிடமே தமிழ் கற்றார். சென்னை சென்று காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார், அம்பலவாண தேசிகர் உள்ளிட்ட தமிழ் அறிஞர்களிடம் மரபான குருகுல முறைப்படி தமிழ்க்கல்வி பயின்றார்.

அ வில்சன்,இதழாசிரியர்

# மீனாட்சிசுந்தரம் பிள்ளை

கட்டுரை

**பிறப்பு, படிப்பு :**

ஆசாரக்கோவை முதலிய ஒழுக்க நூல்களையும், நன்னூல், தண்டியலங்காரம் முதலிய இலக்கண நூல்களையும், கலம்பகங்கள் புராணங்கள் போன்ற சிற்றிலக்கியங்களையும், சைவத்திருமுறைகளையும் உள்ளடக்கியதாக இருந்தது. மீனாட்சிசுந்தரம்பிள்ளை மாணவர்களுக்குக் கற்பித்ததும் இந்நூல்களையே.

**இலக்கியப் பணிகள்**

மீனாட்சிசுந்தரம் பிள்ளை சிற்றிலக்கியம், புராணம் என்னும் இரண்டு வகைமையில் மட்டுமே எழுதியிருக்கிறார். பிள்ளைதமிழ் வடிவில் பல நூல்களை இயற்றியமையால் 'பிள்ளைதமிழுக்கோர் பிள்ளை' என இவரை புகழ்ந்திருக்கிறார்கள். பல ஆலயங்களுக்கு தலபுராணங்கள் புதிதாக எழுதப்பட்டன. சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பாடல்களை இவர் இயற்றியதாக உ.வே.சாமிநாதையர் குறிப்பிடுகிறார். இவரது படைப்புகள் 42-ஐ ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளை பிரபந்தத் திரட்டு என்னும் பெயரால் இரு தொகுதிகளாக உ.வே.சாமிநாதய்யர் வெளியிட்டுள்ளார். இதுவரை 73 நூல்கள் வெளியாகியிருக்கின்றன. புராணங்கள் 22, சிறு காப்பியங்கள் 6, பிரபந்தங்கள் 45.

**இசைப் பணி**

மீனாட்சிசுந்தரம் பிள்ளை கர்னாடக இசைப் பாடல்களும் எழுதியிருக்கிறார். அரிசிலாற்றங்கரையில் அமைந்த திரு அம்பர் என்ற தலத்துக்கு விரிவான தலபுராணம் எழுதியதோடு, அங்குள்ள அம்பிகை வம்புவனப் பூங்குழல் நாயகி மீது கர்னாடக இசைக் கீர்த்தனமும் இயற்றியிருக்கிறார்.

அ வில்சன்,இதழாசிரியர்

# மீனாட்சிசுந்தரம் பிள்ளை

## கட்டுரை

### கல்விப் பணி

மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் காலகட்டத்தில் ஆங்கிலேயரால் இந்தியாவுக்கு நவீனக்கல்வி முறை அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. பள்ளிகளும் கல்லூரிகளும் உருவாகியிருந்தன. ஆனால் தமிழ்க்கல்வி பெரும்பாலும் மரபான குருகுல முறைப்படித்தான் கற்பிக்கப்பட்டது.ஆசிரியருக்கு மாணவர்கள் முடிந்தால் குருதட்சிணை எனப்படும் காணிக்கை அளிக்கலாம். அரசர்களும், செல்வந்தர்களும், மடாதிபதிகளும் ஆசிரியர்களுக்குரிய நிதியுதவியை அளிப்பார்கள். மீனாட்சி சுந்தரம்பிள்ளைக்கு திருவாவடுதுறை ஆதீனம் நிதியுதவி அளித்தது. மாணவ்ர்கள் அவர் இல்லத்தில் தங்கி கல்வி கற்றனர். இச்சித்திரத்தை உ.வே.சாமிநாதய்யர் அவருடைய ’என் சரித்திரம்’ என்னும் நூலிலும் ’ திரிசிபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் என்னும் நூலிலும் எழுதியிருக்கிறார்.

### மாணாக்கர்கள்

அவரிடம் குருகுல முறைப்படி கல்வி பயின்றவர்கள் இன்னொரு சாரார். மாயூரம் வேதநாயகம் பிள்ளை, வல்லூர் தேவராசபிள்ளை, மழவை மகாலிங்கையர், பூவாளூர் தியாகராசச் செட்டியார், இராமநாதபுரம் அழகிரி ராஜுப்பிள்ளை, ஆகியோர் முதல் வகையில் புகழ்பெற்றவர்கள்.

### இலக்கியத்திறன்

மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் காலகட்டத்தில் தமிழ் உரைநடை இலக்கியம் உருவாகிக்கொண்டிருந்தது என்றாலும் அவர் மரபார்ந்த செய்யுள்நடையிலேயே எழுதினார். பழைய தமிழ்ச்சொற்களையும் வழக்கமான அணிகளையுமே பயன்படுத்தினார்.

அ வில்சன்,இதழாசிரியர்




Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# மீனாட்சிசுந்தரம் பிள்ளை

## கட்டுரை

**மறைவு**

**மீனாட்சிசுந்தரம் பிள்ளை பிப்ரவரி 1, 1876 அன்று தமது 61-ஆவது வயதில் மறைந்தார்.**



# அகர முதல நாளை நமதே



முடிந்த பிரச்சினைகளை
நினைத்து கவலை
அடைவதை நிறுத்தி விட்டு
வரும் காலத்தை துணிந்து
தன்னம்பிக்கையுடன்
எதிர்த்து நில்லுங்கள்.

Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

அகர முதல இலக்கிய பேரவை

அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

**என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,**

**அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை**
**அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.**

தொடர்பிற்கு:
9597887847/8870884969

www.அகரமுதல.com

agaramuthalaa

aagaramuthala@gmail.com